நிர்வாக வசதிக்காக ஒரு மாவட்டமாக இருப்பதை இரண்டாகப் பிரிப்பதைப்போல, தமிழ்நாட்டையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும். தென் மாநிலம் என்றும், வட மாநிலம் என்றும் அமைத்து, இரண்டு அமைச்சரவைகளை ஏற்படுத்த இந்த அமைச்சரவை சிபார்சு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இங்கேயுள்ள மேல் சபையைக் கலைத்து விட்டு இரண்டு அமைச்சரவைகளைத் தமிழ்நாட்டிலே ஏற்படுத்துவதற்குச் சிபாரிசு செய்ய வேண்டும். ஆகையால், நம்முடைய தென் மாநிலத்திலே மூன்று தமிழ் பேசும் மாநிலங்கள் இருக்கின்றன என்ற பெருமையும் உண்டு. அத்துடன், குறுகிய பகுதியாக இருந்தால் வளர்ச்சிக்கும், நிர்வாகத்திற்கும் வசதியாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு மின்சார வசதி வழங்குவதுபற்றி எடுத்துக்கொண்டால், பல்புகளைக் கடையிலே வாங்கும்பொழுது சில தவறுகள் ஏற்படுகின்றன. அவ்வாறு தவறுகள் ஏற்படா வண்ணம் இருக்க, பல்புகளிலும், டியூப்லைட்டுகளிலும் 'எல்.ஏ., அல்லது 'ஊராட்சி' அல்லது 'ஊராட்சி ஒன்றியம்' என்ற முத்திரையிட்டு வழங்கினால் தவறுகள் நேராமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது சர்க்காருக்கு விமானங்களும், ஹெலிகாப்டர்களும் வாங்குவதுபற்றி யோசனை இருக்கிறது. உளுந்தூர்பேட்டையிலும், வேலூரிலும் ஏரோடிராம்கள் இருக்கின்றன. இந்த இரண்டு விமான நிலையங்களையும் புதுப்பித்து, விமானங்கள் செல்ல வசதி செய்து, லோகல் சர்வீஸ், மாநிலத்திற்குள்ளேயே விமான சர்வீஸ் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

(1) அறிவிப்புகள்.

(இ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (1979 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள்) கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளின்படி, ஏற்கெனவே எடுத்துக்கொள்வதாக அறிவிக்கப்பட்ட மானியக் கோரிக்கைகள் பற்றிய நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்டவாறு மாறுதல்கள் செய்யப் பெற்றுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்;

1979 மார்ச் 23] [பேரவைத் தலைவர்]

மானியக் கோரிக்கைகள் 22—கால்நடை வளர்ப்பு, 30—சமூக நலன், 13—நீதி நிர்வாகம், 14—சிறைச்சாலைகள் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் என்று குறிப்பிட்டிருந்தது 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4 ஆம் நாள் என்று மாற்றப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, மானியக் கோரிக்கை எண். 9—மாநில ஆட்சி தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மானியத் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் 4—4—1979 என்று குறிப்பிட்டிருந்தது 6—4—1979-க்கு மாற்றப்பட்டுள்ளது.

அதேபோன்று, மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள், மானியக் கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு 2—4—1979 என்று குறிப்பிட்டிருந்தது 16—4—1979 அன்றைக்கு மாற்றப்பட்டுள்ளது.

அடுத்து, மானியக் கோரிக்கை எண். 32—பின்தங்கிய வகுப்பினர் நலன், மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா, மானியக் கோரிக்கை எண். 45—காட்டு வளத் துறை, மானியக் கோரிக்கை எண். 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல், மானியக் கோரிக்கை எண். 56—காட்டு வள மூலதனச் செலவு 16—4—1979 என்று குறிப்பிட்டிருந்தது 2—4—1979-க்கு மாற்றப்பட்டிருக்கிறது.

அடுத்து, மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள் முதலியோர் நலன் 31—3—1979 என்று குறிப்பிட்டிருந்தது 3—4—1979-க்கு மாற்றப்பட்டிருக்கிறது. அன்று, தேவை இருப்பின், பேரவை மாலையிலும் கூடும்.

அடுத்து, மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும், மானியக் கோரிக்கை எண். 27—கதர், மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் 3—4—1979 என்று குறிப்பிட்டிருந்தது 31—3—1979 அன்றைக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.